## வரலாற்றைத் திரிப்பவர்களை வரலாறு தண்டிக்கும்!

“பாபர் மசூதி மூன்று குவிமாடங்களைக் கொண்ட ஒரு சர்ச்சைக்குள்ளான கட்டடம் என, என்.சி.ஈ.ஆர்.டி எனப்படும் தேசியப் பாடநூல் கழகம் வெளியிட்டுள்ள 12-வது வகுப்புப் புத்தகத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த கலவரங்கள் குறித்த பகுதிகளை, பாடப் புத்தகத்திலிருந்து நீக்கியிருக்கிறோம். ஏனெனில், நாங்கள் வன்முறை எண்ணமும், மனச்சோர்வும் கொண்ட குடிமக்களை உருவாக்க விரும்பவில்லை.”

இப்படிக் கூறியிருப்பவர் பா.ஜ.க கூட்டணி அரசால் நியமிக்கப்பட்ட அந்த அமைப்பின் தலைவர்! அவரை நியமித்தவர்கள்தான் பாபர் மசூதியை இடித்த வன்முறையாளர்கள். அத்வானி, சிங்கால், வாஜ்பாயி போன்றவர்களின் பேச்சுக்கள்தான் வன்முறையாளர்களை உருவாக்கியது. பாடப் புத்தகங்கள் அல்ல.

“உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கேற்பத்தான் பாடப் புத்தகத்தில் மாற்றம் செய்திருக்கிறோம்” என்று மற்றொரு பொய்யையும் சொல்கிறார் அவர்.

பாபர் மசூதி இடிப்பு ஒரு கிரிமினல் செயல், அதில் ஈடுபட்டோர் தண்டிக்கப்பட வேண்டும் என்றுதான் உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது.

வரலாற்றை மறுப்பவர்களையும், மறைப்பவர்களையும், திரிப்பவர்களையும் வரலாறு தண்டிக்கும்!

மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்தால், ஜனநாயகத்துக்கு நியாயம் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லாத வகையில், எத்தனை முறை ஆட்சி அமைத்தாலும் அவர்கள் வரலாற்றைத் திரிப்பார்கள், என்பதற்கு இந்த சம்பவங்களே சான்று.

## ஃப்ளாஷ்பேக்





ஹ.மதிபாபு

### நடைப்பயிற்சிப் படம்!

என் பெரியப்பா ந.சிவபூசணம் அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றியவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொள்ளும் அதிகாலை நடைப்பயிற்சியில், அன்றாடம் உடன் செல்வார். அப்படி ஒரு நாள் அண்ணா அறிவாலயத்தில் காலை 5 மணிக்கு நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தபோது, எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இந்தப் படத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் பேராசிரியர் நாகநாதனும் உடனுள்ளார்.

– ஹ.மதிபாபு,
நுங்கம்பாக்கம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஆதரவு பெற்ற வேட்பாளர்கள்!

1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, திராவிட நாடு கோரிக்கையில் கையெழுத்திட்ட வேட்பாளர்களுக்கு, கழகம் ஆதரவு அளித்தது. அதன்படி கழக ஆதரவு பெற்ற 43 பேர் சட்டசபைக்கும், 8 பேர் நாடாளுமன்றத்துக்கும் தேர்வாகினர். கழகம் நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் அந்த உறுப்பினர்கள் பேசுகையில், ‘திராவிட நாடு அமைய, தி.மு.க. காட்டும் வழிகளில் செல்வதற்கு நாங்கள் தயங்க மாட்டோம்’ எனக் கூறினர். இவர்களில் சிலர் சேர்ந்து சட்டமன்றத்தில் ‘திராவிட பார்லிமெண்டரி கட்சி’ என இயங்கினர். அதற்கு அறிஞர் அண்ணா ஒப்புதல் அளித்தார்.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** **16**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

## ‘சண்டாளன்’ என்று அழைக்காதே!

பிரிட்டிஷ் ஆட்சியில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்புகள் வங்காளத்தின் சமூகப் பிரிவுகளுக்கு இடையே நிலவிய ஏற்றத்தாழ்வுகளை வெளிச்சம் போட்டு காட்டின. உதாரணத்துக்கு, 1911-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 1000 பேர்களில் 532 பைத்யாக்களும், 399 பிராமணர்களும், 347 காயஸ்தர்களும் கல்வியறிவு பெற்றிருந்தனர். அதே வேளையில் ‘தெலி’ எனும் பிற்படுத்தப்பட்ட சாதியில் 163 நபர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றிருந்தனர். தலித்துகளின் கல்விநிலை மிகவும் மோசமாக இருந்தது. ராஜ்பன்ஷி சாதியில் 51, பாக்தி சாதியில் 19, நாம சூத்திரர்களில் 49 பேர் மட்டுமே கல்வியறிவு பெற்றிருந்தனர்.

1812-இல் சண்டாளர் சாதியில் பிறந்த ஆன்மிகவாதியான ஹரிசந்த் தாகூர் வைணவ தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ‘**மாத்துவ மகா சங்கம்**’ எனும் அமைப்பை நிறுவி, சண்டாளர்களை நாம சூத்திரர்கள் என்ற பொது அடையாளத்தின் கீழ் ஒருங்கிணைத்தார். **மாத்துவ மகா சங்கம்** சாதிய ஒடுக்குமுறையை எதிர்த்ததுடன், ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி, சமூக முன்னேற்றத்துக்கு வழி வகுத்தது. ஹரிசந்த் தாகூரின் மறைவுக்குப் பின்னர் அவரது மகன் குருசந்த் தாகூர் கல்வி நிறுவனங்களை நிறுவி, ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றத்துக்குப் பாடுபட்டார்.



**கல்வியில் தங்களின் பின்தங்கிய நிலை குறித்து, விழிப்புணர்வு பெற்ற நாம சூத்திரர்கள், கல்வி கற்கும் உரிமை கோரினர்.**

18-ஆம் நூற்றாண்டு வரை ‘சண்டாளர்கள்’ என்று அழைக்கப்பட்டவர்கள் கட்டியெழுப்பிய எதிர்ப்பியக்கத்தின் விளைவாக ‘நாம சூத்திரர்கள்’ என்ற புதிய பெயரில் அறியப்பட்டனர். முதன்முறையாக 1891-ஆம் ஆண்டுக்கான மக்கள்தொகை அறிக்கையில், நாம சூத்திரர் என்ற புதிய பொதுப் பெயரின் கீழ் அழைக்கப்படலாயினர்.

இந்து-முஸ்லிம் என மத அடிப்படையிலான பிரிவினையும் முரணியக்கங்களும் மிகுந்திருந்த வங்காள மாகாணத்திலிருந்துதான் முதன்முதலாக இந்தியா முழுமைக்குமான சட்டரீதியான இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் பிறந்தன. சமுதாயத்தில் ஏற்படும் முரண்களே, சமூக மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். அந்த வகையில், பிரிட்டிஷ் அரசின் ஆட்சி நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்திய படித்த இந்து உயர் சாதி வர்க்கத்தினருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட முரணியக்கங்களின் விளைவாக, பின்தங்கிய வங்காள முஸ்லிம்களுக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்புப் பாகுபாட்டுக் கொள்கைகள் (*Protective Discriminative Policies*) இந்து சமூகத்தின் அடித்தட்டிலிருந்த பல்வேறு சாதிகளுக்கு உத்வேகம் அளித்தன.

ஏனையவர்களைப் போன்று சமூகத்தில் உயர்நிலை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் உத்வேகம் பெற்ற பல்வேறு சாதியக் குழுக்கள் சாதி சங்கங்களை அமைத்து, நிர்வாகத்திலும் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தங்களுக்குப் பங்கு வேண்டும் என்று கோரத் தொடங்கினர். ஒடுக்கப்பட்ட நாம சூத்திரர்கள் கிராம அளவில் குழுக்களை அமைத்து, சமூகப் பொருளாதார மேம்பாட்டினை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ஏற்றத்தாழ்வுடன் கூடிய சமூக அமைப்பை மாற்றியமைக்கும் நோக்குடன், 1870 களில் தொடங்கிய நாம சூத்திரர்களின் எதிர்ப்பியக்கம் படிப்படியாக வளர்ந்து 1910-ஆம் ஆண்டுவாக்கில், அவர்களின் சமூக மேம்பாட்டுக்காகப் பாடுபடும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கமாகப் பரிணமித்தது.

கல்வியில் தங்களின் பின்தங்கிய நிலை குறித்து, விழிப்புணர்வு பெற்ற நாம சூத்திரர்கள், கல்வி கற்கும் உரிமை கோரினர். 1905-ஆம் ஆண்டுக்கும் 1917-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நாம சூத்திரர்கள் அரசுக்குப் பல்வேறு விண்ணப்பங்களை அனுப்பினர். தங்களின் பின்தங்கிய நிலையைப் போக்க அரசு உதவ வேண்டுமென வலியுறுத்தினர்.

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** **16**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## ஆர்ப்பரித்த மதுரை!

1961-ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ஆம் தேதி ஈ.வெ.கி.சம்பத் தி.மு.கவில் இருந்து விலகிய 2 நாட்களில், தூத்துக்குடியில் பொதுக்குழு கூடியது. ஏப்ரல் 21, 22 ஆகிய 2 நாட்கள் நடைபெற்ற பொதுக்குழுவில், 3-வது மாநில மாநாட்டுக்கான நாள் குறிக்கப்பட்டது. அதே ஆண்டு, ஜூலை 13, 14, 15, 16 ஆகிய தேதிகளில் மதுரையில் மாநாட்டைக் கூட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஜூலை 11-ஆம் தேதி காலையில் இருந்தே, தி.மு.க தலைவர்கள் மதுரையில் குவியத் தொடங்கினர். கொடிகளாலும் தோரணங்களாலும் மதுரை விழாக்கோலம் பூண்டிருந்தது. ஜூலை 12-ஆம் தேதி பொதுக்குழு உறுப்பினர்கள் கூடி, நாவலர் இரா.நெடுஞ்செழியனை அவைத் தலைவராகவும், சத்தியவாணி முத்துவை கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகவும், ஏ.கோவிந்தசாமியை தொழிலாளர் அணிச் செயலாளராகவும் தேர்வு செய்தனர்.

ஜூலை 13-ஆம் நாள் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் நடந்து வர, பின்னே நூற்றுக்கணக்கான வண்டிகள், பேருந்துகள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் அணி வகுக்க பிரமாண்ட ஊர்வலம் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா, கலைஞர், நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன், சத்தியவாணிமுத்து, எசு.முத்து ஆகிய தலைவர்கள் கப்பல் போன்று அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். சாலைகளில், இலட்சக் கணக்கான மக்கள் திரண்டு ஊர்வலத்தை வரவேற்றனர். காலை 9 மணிக்கு தெப்பக்குளம் அருகில் இருந்து, புறப்பட்ட ஊர்வலம் திருப்பரங்குன்றத்தில் மாநாட்டுத் திடலை அடைய மாலை 4 மணி ஆனது.

கழகத்தின் இருவண்ணக் கொடியை அண்ணா ஏற்றிவைக்க, திராவிடர் பண்பாட்டுக் கண்காட்சியை சத்தியவாணிமுத்து திறந்துவைத்தார். இரண்டாவது நாளில் கே.ஏ.மதியழகன் மாநாட்டைத் திறந்து வைக்க, சுருக்கமான அளவில் தலைமை உரையாற்றினார் அண்ணா. அப்போது வெள்ளத்தில் தவித்த, திருச்சி மக்களின் துயர் துடைக்க, மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் நிதியுதவி அளிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார் அண்ணா. உடனடியாக மேடையில் கொடுக்கப்பட்ட 2,500 ரூபாய் நிதியோடு, அன்றே திருச்சி சென்று ஒப்படைத்துவிட்டு வந்தார் அண்ணா.







மதுரை மாநாட்டில்...

3-வது நாளிலும், 4-வது நாளிலும் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தி.மு.கழகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரும் பேசினர். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற, கர்நாடக மாநிலத் தலைமை நீதிபதி மேடப்பா, தி.மு.கழகத்தின் இலட்சியங்கள், கொள்கைகளைப் பாராட்டி ஆங்கிலத்தில் பேசினார். கழகத்தின் பொருளாளர் முத்தமிழறிஞர் கலைஞர் மேடையில், மாநாட்டுச் செலவுக் கணக்கை வாசித்தபோது, மொத்தக் கூட்டமும் ஆரவாரத்துடன் ஏற்றுக்கொண்டது.

**ஆகஸ்ட் முதல் வாரத்திலேயே பட்டியல் தயாரானது. அடுத்த ஆண்டே கழகம் எதிர்க்கட்சியானது, மாநாட்டின் தாக்கமும் வென்றது; நோக்கமும் வென்றது.**

ஒவ்வொரு நாளும் ஒரு நாடகம் என ‘தென்பாண்டி வீரன்’, ‘மணிமகுடம்’, ‘வாழ தலை கொடுத்தான்’, ‘சுமைதாங்கி’ ஆகிய 4 நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. இறுதியாக, உரையாற்றிய அண்ணா, தி.மு.கழகத் தொண்டர்களை அல்சீரிய போராட்ட வீரர்களுடன் ஒப்பிட்டுப் பேசியபோது, கூட்டம் உணர்ச்சிபொங்க பூரித்தது.


ஈ.வெ.கி.சம்பத்தின் பிரிவினை, தி.மு.கழகத்தைச் சிறு துரும்பு அளவில்கூட பாதிக்கவில்லை என்பதை, மதுரை மாநாடு மெய்ப்பித்தது. அடுத்து வரும் பொதுத்தேர்தலில் தி.மு.க. போட்டியிட சாத்தியமுள்ள தொகுதிகளைக் கண்டறிவதற்கான, ஆய்வுக்குழுக்களும் மாநாட்டில் அமைக்கப்பட்டன. ஆகஸ்ட் முதல் வாரத்திலேயே பட்டியல் தயாரானது. அடுத்த ஆண்டே கழகம் எதிர்க்கட்சியானது, மாநாட்டின் தாக்கமும் வென்றது; நோக்கமும் வென்றது.

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**513**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131